சுருக்கம்

மறுவாழ்வுத் துறை – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.10.2021 அன்று வெளியிட்ட செய்தி வெளியீடு – "வெளிநாடுவாழ் தமிழர்களின் முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்படும்" என்ற அறிவிப்பினை செயல்படுத்துவது – ஆலோசனைக் குழு அமைத்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொது(மறுவாழ்வு.2(2))த் துறை**

**அரசாணை(நிலை)எண்.327** **நாள்.26.05.2023.**

சோபகிருது வருடம், வைகாசி–12
திருவள்ளுவர் ஆண்டு–2054
படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சரின் செய்தி வெளியீடு எண்.842, நாள்.06.10.2021.
2. அரசு கடிதம் எண்.23051/ம.வா.2(2)/2022–1, நாள் 27.06.2022.
3. ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம், சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண்.இ1/13838/2022, நாள் 24.02.2023.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களுள் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்:–

**"வெளிநாடுவாழ் தமிழர்களில் பெரும்பாலானோர் தங்களது சேமிப்பினை தாய்நாட்டில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஆர்வத்துடன் உள்ளனர். இதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, இவர்களது முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்படும்"**

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக, அத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக உரிய கருத்துரு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரிடம் கோரப்பட்டது.

த.பி.பா..

3. மேலே, மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவில் வெளிநாடு வாழ் தமிழர்களின் சேமிப்பினை தமிழ்நாட்டில் "**பாதுகாப்பான முறையில் முதலீடு**" என்ற செயல் திட்டத்தில் சிறுமுதலீடுகள் செய்வது தொடர்பாக அயலகத் தமிழர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்களை ஆராய்வதற்கு பொது (ம) மறுவாழ்வுத் துறையின் சிறப்பு செயலாளர் அவர்களின் தலைமையின் கீழ் கீழ்க்காணும் உயர் அரசு அலுவலர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை அமைத்து தரும்படி கோரப்பட்டுள்ளது:

i) சிறப்பு செயலாளர், பொது (ம) மறுவாழ்வுத் துறை – தலைவர்,
ii) இணைச் செயலளார், நிதித்துறை – உறுப்பினர்,
iii) ஆணையர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை – உறுப்பினர்
iv) ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை – உறுப்பினர் செயலர்,
v) அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்.

4. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று, வெளிநாடு வாழ் தமிழர்களின் சேமிப்பினை தமிழ்நாட்டில் சிறுமுதலீடுகள் செய்வது தொடர்பான விண்ணப்பங்களை ஆராய்ந்து, அவற்றை அரசுச் சார்–நிறுவனங்களான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் **பாதுகாப்பான முறையில் அயலகத் தமிழர்கள் முதலீடு செய்வதற்கு,** பொதுத் துறையின் சிறப்புச் செயலாளர் தலைமையிலான ஆலோசனைக் குழுவை கீழ்க்கண்டவாறு அமைக்க அரசு ஆணையிடுகிறது:–

| | | |
|---|---|---|
| (1) | சிறப்பு செயலாளர், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை | தலைவர் |
| (2) | துணைச் செயலாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலையில் உள்ள நிதித்துறையைச் சார்ந்த அதிகாரி ஒருவர் | உறுப்பினர் |
| (3) | மேலாண் இயக்குநர், தொழில் வழிகாட்டி நிறுவனம் | உறுப்பினர் |
| (4) | அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் | உறுப்பினர்– செயலர் |
| (5) | அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர் | உறுப்பினர் |

த.பி.பா..

5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 06.10.2021 அன்றைய செய்தி வெளியீட்டு அறிவிப்பான "**வெளிநாடுவாழ் தமிழர்களில் பெரும்பாலானோர் தங்களது சேமிப்பினை தாய்நாட்டில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஆர்வத்துடன் உள்ளனர். இதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, இவர்களது முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்படும்**" என்ற திட்டத்தினை செயல்படுத்துவதற்கும், அத்திட்டத்திற்கான உரிய பணிகளை மேற்கொள்வதற்கும், முன்பக்கம் பத்தி 4-இல் அமைக்கப்பட்ட குழுவுடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதி(பொது)த் துறையின் அ.சா.எண்.20924/ நிதி(பொது)/2023, நாள் 25.05.2023, ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**டி.ஜகந்நாதன்**
**அரசுச் செயலாளர்**

**பெறுநர்**

முதன்மைச் செயலாளர், நிதித்துறை, சென்னை-9.
சிறப்புச் செயலாளர் (பொது),
பொது மற்றும் மறுவாழ்வுத் துறை, சென்னை-9.
மேலாண்மை இயக்குநர்,
தொழில் வழிகாட்டி நிறுவனம், சென்னை - 35.
ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம், சென்னை-5.
புலம் பெயர் தமிழர் நல வாரியம், சென்னை -5.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்-1, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9. (கோ.எண்.23051/ம.வா-II(2)/2022)
சிறப்பு நேர்முக உதவியாளர்,

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.
நிதி(து.செ/(பொது)த் துறை, சென்னை-9.
பொது(ம.வா.I/III)த் துறை, சென்னை-9.
பொது(அ.ந.மு.1)த் துறை, சென்னை-9.
பொது(பல்வகை)த் துறை, சென்னை-9.
இ.கோ/உதிரி.

**//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//**

24/5/2023

**பிரிவு அலுவலர்**